REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 18உ புதன் (3—8—55) ★ ✶ வெளியூர்: ஆடி 19உ வியாழன் (4—8—55) [இதழ் 43

மக்கள் சபை நடைபெறும் விதம்!

புதுடில்லி, ஆக. 2—

சிவில் சட்டத் திருத்த மசோதா மீது மக்கள் சபையில் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தது; ஆனால், 'கோரம்' இல்லை; மூன்று முறை மணி அடித்து உறுப்பினர்களை சபைக்கு அழைக்க வேண்டியிருந்தது.

பெருவாரியான உறுப்பினர்களைக் கொண்ட சர்க்கார் தரப்பினர், எதிர்க் கட்சியினரை 'கோரம்' சேர்க்க உதவுமாறு கோரியிருக்கின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

'இந்தி நுழைவதற்கு அனுமதிக்கமாட்டேன்'

'தமிழ் மொழியே கல்லூரிகளில் போதனு மொழியாக வேண்டும்'

'ஆங்கில மொழி அறிவும் பெருக வேண்டும்'

'சவமொழிக்கு 'பண்டர்கார்' போல தமிழுக்கு 'அண்ணமலை' திகழ வேண்டும்!'

துணைவேந்தர் நாராயணசாமி பரணி!

அண்ணமலைநகர், ஜூலை 31—

"அகில இந்திய அரசாங்க (ஐ. ஏ. எஸ்) பரீட்சைக்கு இந்தி மொழி கட்டாயபாடமாக்கப்படுவதையோ, அல்லது தென்னிந்தியக் கல்லூரிகளில் இந்தி பயிற்சி மொழியாக இடம் பெறுவதையோ நான் முழு மூச்சுடன் எதிர்க்கிறேன்."

—இவ்வாறு, அண்ணமலை பல்கலைக்கழகத் துணைவேந்தர் டி. எம். நாராயணசாமி அவர்கள் கூறியுள்ளார்.

"ஆங்கிலேயர்களுக்கு மட்டுமே உரிமையுடைய மொழியாக இன்று ஆங்கிலம் இருக்கவில்லை; ஒரு உலக மொழி இருக்க வேண்டுமானல், ஆங்கிலத்தைத் தவிர்த்து வேறு எம்மொழியும் இருக்க முடியாது. எனவே, ஆங்கில மொழியின் தரம் காப்பாற்றப் படுவதுடன் உயர்த்தவும்பட வேண்டும்."

"தமிழ் இலக்கிய வளத்தைப் பெருக்கும் நோக்குடனும் இப்பல்கலைக்கழகம் துவங்கப்பட்டது; அக்குறிக்கோளைத் திறம்படச் செயலாற்றுவதே எனது பெரும் விருப்பமாகும்; மத்திய அரசாங்கத்தின் நன்கொடையைப் பெற்று திராவிட மொழி ஆராய்ச்சித் துறையைத் தனியாகத் துவங்கக் கருதியுள்ளேன். வட மொழியில் போதிய பயிற்சி அளிப்பதற்கு என்று மட்டுமே பூனவில் நடைபெற்றுவரும் பண்டர்கர் கலைக்கூடத்தைப் போன்றே, அண்ணமலை பல்கலைக்கழகம், தமிழ்ப் பயிற்சிக்குச் சிறந்ததோர் முன்மாதிரியாக விளங்க வேண்டும்."

அண்ணமலை பல்கலைக்கழக அலுவலர்கள் தம்மைப் பாராட்டிய நேரத்தில், துணைவேந்தர் மேற்குறித்துள்ள கருத்துக்களையும் அளித்துள்ளார்.

இந்திய நிர்வாக 'சர்வீஸ்' போன்ற அகில இந்திய உத்தியோகங்களுக்கான போட்டிப் பரீட்சைகளில், துவக்க காலத்தில் இந்தியை இஷ்ட பாடமாக வைத்துக்கொள்வதும், பின்னர் கட்டாய பாடமாக்குவதும் பற்றிய பிரச்சினை குறித்து, திரு நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"வாய் மொழிப் பரீட்சையிலோ அல்லது எழுத்து மூலமான பரீட்சையிலோ இந்தி எந்தக் காலத்திலும் கட்டாயபாடமாக்கப்படக் கூடாது; பரீட்சைகளில் தேறிவிட்ட பிறகு, அவர்கள் இந்தி மொழி அறிவு பெற்றுக்கொள்ள வேண்டுமென சர்க்கார் கோரலாம்.'

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கல்லூரிகளில் போதனு மொழி பற்றிய பிரச்சினைதான் இன்று நாட்டின் மிகக் கவலை தரும் பிரச்சினையாக இருக்கிறது; இதுபற்றி, ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன; ஒன்று, வட்டார மொழியான தமிழை உடனடியாக அல்லது, கூடிய சீக்கிரம் கல்லூரிகளில் போதனு மொழியாக்கிவிட வேண்டுமென்பது;

"தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், கல்லூரிகளில்

(4-ம் பக்கம் பார்க்க)

வேலூர்—காஞ்சி இருப்புப் பாதை

சென்னை மாநிலத்தில், வேலூர்—காஞ்சீபுரம் ஆகிய இடங்களுக்கிடையே மொத்தம் 44 கல் தொலைதூரத்திற்குப் புதிதாக இருப்புப்பாதை போடுவதற்கான பூர்வாங்க எஞ்சினீயரிங் சர்வே நடத்துவதற்காகும் செலவுத் தொகையை மத்திய இரயில்வே குழு அனுமதித்துவிட்டதாகத் தெரியவருகிறது.

'நாட்டின் பலவீனம் ஏழ்மையோ, பற்றுக்குறையோ அல்ல!'

'மக்கள் சிந்திக்காமலிருப்பதே' என்கிறார் காங்கிரஸ் தலைவர் தேபர்

ஐதராபாத், ஆக. 3—

"நமது நாட்டின் உண்மையான பலவீனம், ஏழ்மையோ, பற்றுக்குறையோ அல்ல; ஆனால், மக்களின் சிந்தனை சக்தியைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிற 'சொரணை'யின்மை தான் காரணம்;

"தங்களுடைய பிரச்சினைகள் என்ன? தங்களின் இலட்சியங்கள் யாவை?—என்பனவற்றைச் சிந்திப்பதை, மக்கள், அறவே விட்டொழித்து விட்டனர்; இதுதான் நாட்டின் உண்மையான பலவீனமாகும்,"

என்று, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேபர், ஐதராபாத்-செகந்தராபாத் ஆகிய இரு நகரசபைகள் கூட்டாக அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"மக்களை தீவிரமாகச் சிந்திக்க வைப்பதற்காக, அவர்களுடைய நோக்கத்தை எப்படி மாற்றி, உணர்வு பெறச் செய்வது என்பது தான் பிரச்சினையாயிருக்கிறது;

"தங்களுடைய உரிமைகளுடன் கூட பொறுப்புகளையும், தங்களின் தேவைகளுடன்கூட கடமைகளையும் மக்கள் உணரத் துவங்குகிற அந்த நேரத்திலேயே, இந்த மாற்றம் வெளிப்படையாகும்."

'மாணவர்களின் ஒழுங்கின்மைக்கு ஆசிரியர்களே பொறுப்பு!'

சௌராஷ்டிர கல்வி மந்திரி குற்றச்சாட்டு

ராஜ்கோட், ஆக. 3—

"மாணவர்களின் ஒழுங்கின்மைக்கும், கல்வி நிலையங்களில் ஏற்படும் வேலை நிறுத்தங்களுக்கும், உண்மையில் ஆசிரியர்களே பொறுப்பாளிகள்; ஆசிரியர்கள், மாணவர்களுக்கு ஒழுங்குணர்வு ஏற்படச் செய்திருந்தால், வேலை நிறுத்தங்கள் தோன்றுவதற்கே வழியில்லை,"

என்று, சௌராஷ்டிர 'செகண்டரி' ஆசிரியர்கள் மாநாட்டில் பேசிய கல்வி மந்திரி ஜே. கே. மோடி என்பார் குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த மாநாட்டில் ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்றும், மாநில சட்ட சபையில் தங்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றும், தங்களின் குழந்தைகளுக்கு உயர்தரக் கல்வி பெற சலுகை வேண்டுமென்றும், மாநில சர்க்காரின் கல்விக் குழுக்களில் தங்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றும் கோரி தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றனர்.

'சிலோன் தமிழர் பிரச்சினைக்குப் பரிகாரம் வேண்டும்'

'தென்னிந்தியா தொழில் மயமாக்கப்பட வேண்டும்'

'சேலத்திற்கு ஒரு உருக்குத் தொழிற்சாலை வேண்டும்'

'ஆந்திர—சென்னை எல்லை சிக்கல் அன்பு முறையில் தீர்க்கப்பட வேண்டும்'

சென்னை சட்ட சபையில் உறுப்பினர் கோரிக்கை

சென்னை, ஆக. 2—

"தென்னாட்டில் தொழில்கள் பரவலாக ஏற்படுத்தப்படவேண்டும்—சேலத்தில் ஒரு உருக்குத் தொழிற்சாலையை நிறுவ வேண்டும்—தென்னாட்டவர் விவசாயத்தையே நம்பியிருக்க முடியாது—இலங்கை இந்தியர்களின் கண்ணீரைத் துடைக்க மத்திய அரசாங்கத்தை சென்னை அரசாங்கம் தூண்ட வேண்டும்," என்ற கருத்துக்கள் சென்னை சட்ட சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

"இலங்கையிலிருந்து வெளியேற்றப்படும் பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ள இந்தியர்களில் பெரும் பகுதியினர் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களே; அவர்களின் துயரங்களுக்குப் பரிகாரம்தேடும் வகையில், இந்தப் பிரச்சினையை, இந்தியப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவந்து ஆவன செய்யவேண்டியது, சென்னை சர்க்காரின் கடமையாகும்,"

என்று, கோவை ஏ. சேனுபதி கவுண்டர் சட்ட சபையில் பேசியிருக்கிறார்.

"வட்டார வாரியாக தொழில்கள் பிரித்து அமைக்கப்படவேண்டும்; ஒரு பகுதியிலேயே தொழில்கள் எல்லாம் அமையக் கூடாது; அப்போதுதான், கடந்த காலத்தில் தென்னிந்தியா இழந்துவிட்ட தொழில் நஷ்டத்தை ஈடு செய்வதற்கு உதவ முடியும்,"

என்று, எம். ஏ. முத்தையா அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்.

இந்தக் கோரிக்கையை மேலும் வற்புறுத்திய மணலி சி. கந்தசாமியும், 'சேலத்தில் ஒரு உருக்குத் தொழிற்சாலை நிறுவ வேண்டும்,' என்று விளம்பியிருக்கிறார்.

"நெய்வேலி திட்டம் வெற்றிகரமாக அமையுமானல், பல தொழில்கள் துவங்க முடியுமென்பது, மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்;

"தொழில்களை வட்டார ரீதியாக அமைக்காதது வருந்தத் தக்கதாகும்;

"வட்டார வாரியாக தொழில்கள் அமைந்தால்தான், தென்னாட்டில் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட முடியும்; அதுவும், இங்கு, பெரும் நீர்ப்பாசனத் திட்டங்கள் ஏற்படுத்த வாய்ப்பில்லாதபோது, தென்னாட்டில் தொழில்கள் வளர வேண்டுவது அவசியமாகும்,"

என்று, முத்தையா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

"ஆந்திரா—தமிழக எல்லைத் தகராறுகள் சுமூகமான முறையில் இரு மாநில சர்க்கார்களும் பேச்சு வார்த்தைகள் நடத்துவதின் மூலம் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும்," என்ற கருத்தும் சட்டசபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"நிலச் சீர்திருத்தத்தை பல்வேறு கட்டங்களில் கொண்டுவரும் முயற்சி, மக்களின் நம்பிக்கையைத் தகர்ப்பதாக உள்ளது," என்றும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

தொழில் மயமாக்கப்படுவதில் நாட்டின் பல பாகங்களிடையேயும் ஒரு சமமான நிலை இல்லாவிட்டால் சமதர்ம சமூக அமைப்பு ஏற்பட முடியாது என்றும், தென்னாட்டு மக்கள் வெறும் விவசாயத்தையே நம்பியிருக்க முடியாதென்றும், பல உறுப்பினர்கள் பேசியிருக்கின்றனர்.

ஐக்கிய முன்னணியிலிருந்து விலகி காங்கிரசில் ஐக்கியமாகியுள்ள திருச்சி இராஜா சிதம்பரம் கூட பேசியிருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க.வின் இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 3—8—'55 புதன்

கவர்னர் சொல்லுகிறார்

கவர்னர் பிரகாசா அவர்களின் துவக்க உரையுடன் சென்னை சட்டசபை கூடியிருக்கிறது. கவர்னர், தனது சொற்பொழிவில், காங்கிரஸ் ஆட்சியாளர்கள் செய்து முடித்துள்ள அரும்பெரும் செயல்களையும், அவைகளால் மக்கள் பெற்றுள்ள விளைவுகளையும், எதிர்காலத்தில் மேற்கொள்ள இருக்கும் பணிகளையும், வழக்கம்போல் விளக்கியும், மிகைபடப் பாராட்டியும் கூறியிருக்கிறார்.

இந்தத் தற்பெருமைப் பேச்சு எந்த கவர்னரிடத்திலும் சர்வ சாதாரணமாக எதிர்பார்க்கக் கூடியதேயாகும். கவர்னர் பிரகாசாவின் பேச்சும், அதை ஒட்டியதாக இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

சென்ற காலத்திலும், நிகழ்காலத்திலும் மக்களின் வாழ்வில், படிப்படியாகக் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டு வருவது போலவும், எதிர்காலத்தில் மேலும் அந்நிலைமை பன்மடங்கு வளம் பெறும் எனவும், கவர்னர் பிரகாசா பூரிப்புடன் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார். அவருடைய உரையின் மூலம் ஒருவருக்கு ஏற்படும் நம்பிக்கையை, நாட்டில் காணப்படும் நடைமுறை வலியுறுத்துவதாக இல்லை. மக்கள் அனுபவித்துவரும் அல்லல்கள் நாளுக்குநாள் வளர்ந்தும், பெருகியும் வருவதைத்தான் நாட்டு மக்களால் உணரவும், காணவும் முடிகிறது.

உலக சமாதானத்திற்கு உயிரூட்டுவது என்ற பெயரில், இந்தியப் பிரதமர் ஒரு உலகம் சுற்றிவரும் பெருந் தொண்டினை புகழ்ந்துரைத்துள்ளார் கவர்னர் பெருந்தகை. இது எதிர்பார்த்த ஒன்றேயாகும்.

அடுத்தபடியாக கடந்த ஒன்பது ஆண்டுகளாக சட்டசபையின் தலைவராகத் தொடர்ந்திருந்து நடுநிலை பிறழாது தம் கடமையையாற்றிய கனம் சிவசண்முகம் அவர்கள் பெற்றுள்ள புதிய அலுவலைக் குறிப்பிட்டு, அவரைப் பாராட்டி இருக்கிறார் கவர்னர். இப்பாராட்டு வரவேற்கத் தக்கதேயாகும். அவருடைய நேர்மையான சேவைக்கு, இப்புதிய அலுவல் மிக மிகக் குறைவானதே என்பதே நமது கருத்து.

அடுத்தபடியாக நில சீர்திருத்தம் குறித்தும் கவர்னர் மிகவும் எச்சரிக்கையாகப் பேசி இருக்கிறார். இதுபற்றி அவர் கூறியுள்ளதை ஒரு விளக்கமாகக் கொண்டு பார்க்குமிடத்து, விரிவான நில சீர்திருத்தம் செய்வதற்கு இன்னமும் சென்னை அரசாங்கம் விரும்பவில்லை என்றே முடிவு கட்ட வேண்டியதாக இருக்கிறது.

உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் என்ற இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு, நில உரிமைக்கு ஒரு திட்டவட்டமான வரையறையை ஏற்படுத்தும் சட்டமியற்றும் கருத்து, சென்னை அரசாங்கத்திற்கு அறவே இல்லை என்பதைத்தான், கவர்னரின் வாயுரை சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது. மேலும் இதற்குச் சில காலம், அதாவது அடுத்துவரும் சட்டசபை தேர்தல் காலம் வரை, இப்பிரச்சினைக்குகந்த முடிவான பரிகாரம் தேடுவதை, சென்னை அரசாங்கம் தள்ளிப்போடும் என்றே எண்ணவேண்டியதாக இருக்கிறது. இந்த நிலச் சீர்திருத்தத்தை, காங்கிரஸ் கட்சிக்கு வாக்குத் திரட்டும் ஒரு பிரசார வலையாக, காங்கிரஸ் அரசாங்கம் பயன்படுத்த நினைத்திருந்தாலும், அது ஆச்சரியப் படத்தக்கது அல்ல.

விரிவான நிலச் சீர்திருத்தத்தை செய்யத் தயங்கும் சென்னை அரசாங்கம், பயிரிட்டு வரும் குடிகளை வெளியேற்றுவதையும், அப்படி வெளியேற்றப்பட்டவர்களுக்கு மீண்டும், முன்போல், பயிரிடும் உரிமையைப் பெற்றுத் தருவதிலும், சட்டமியற்றத் தீர்மானித்திருப்பதாகக் கவர்னர் குறிப்பிட்டிருக்கிறார். அதுவுமன்றி, நேர்மையான ஒரு குத்தகையை நிர்ணயிக்கும் ஒரு ஏற்பாட்டையும் சென்னை அரசாங்கம் மேற்கொள்ளவும் இருக்கிறதாம்.

விரிவான நிலச் சீர்திருத்தம் கொண்டுவரப்படும் எனத் தேனொழுகப் பேசி, குடியானவர்களின் தொல்லைகளை வளரவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டுவந்த அரசாங்கம், இப்பொழுதாவது நல்லறிவு பெற்று நிலச் சொந்தக்காரர்களின் அக்கிரமப் போக்கிலிருந்து குடியானவர்களைக் காப்பாற்றக் கருதி இருப்பது குடியானவர்களால் வரவேற்கத்தகுந்ததேயாகும். குடியானவர்களை வெளியேற்றுவதை ஒரு புகலாகக்கொண்டு அரசியல் தொழில் நடத்தி வந்தவர்களுக்கு, சென்னை அரசாங்கத்தின் புதிய முயற்சியில் அதிருப்தி இருக்கத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

விவசாயப் பொருள் விலை வீழ்ச்சியைப் பற்றியும், அது மீண்டும் உயர்ந்து வருவது குறித்தும் தனது திருப்தியைத் தெரிவித்துள்ளார் கவர்னர். சென்னை மாநிலத்தின் விவசாய மூலப் பொருளான நெல் விலை, உற்பத்திச் செலவிலும் சில மடங்கு வீழ்ச்சியுற்றதையும், அது இப்பொழுதும் சமநிலையைப் பெறாது இருந்து வருவதையும், அதனால் சிறிய விவசாயி முதல் பெரிய விவசாயி வரை நஷ்டப்பட்டு வருவதையும் அதற்கு எந்தவிதப் பரிகாரமும் செய்ய முடியாமல்—இயலாமல், சென்னை அரசாங்கம் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்து வந்ததையும், கவர்னர் விளக்கமாகக் கூறாது விடுத்தார். கோதுமை விலை வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த, இந்தியப் பேரரசு, தக்க நேரத்தில் தலையிட்டு கோடிக்கணக்கில் ரூபாயைச் செலவிட்டு கோதுமையைக் கொள்முதல் செய்ததையும், நெல்லின் வேகமான விலை வீழ்ச்சியைப் பற்றிக் கவலையின்றி இருந்ததையும், அதனால் தென்னாட்டு விவசாயிகள் பட்ட துன்பத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டு இந்தியப் பேரரசு காலங்கடத்தி வந்ததையும், கவர்னர் குறிப்பிட்டிருக்க வேண்டும். அதை, அவர் செய்யவில்லை. கவர்னர் சொற்பொழிவின் மீது நிகழ இருக்கும் விவாத காலத்தில், சட்டசபை உறுப்பினர்களில் சிலராவது, இதுபற்றி எடுத்துக் கூறுவர் என்ற திடநம்பிக்கை நமக்கு உண்டு.

'இலங்கையிலிருந்து திரும்பும் இந்தியர்களை அகதிகளாக நடத்துக!

'வேலையின்மையைப் போக்க தொழிற்சாலை நிறுவுக'

மலபார் வட்ட ஆட்சி மன்றத் தீர்மானம்

கோழிக்கோடு, ஜுலை 31—

"இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் இந்தியர்களை, அகதிகளைப்போல பாவித்து அவர்களுக்கு வேலை தேடித்தர வேண்டும்.

"மலபார் மாவட்டத்தில் ஒரு முந்திரி பருப்புத் தொழிற்சாலை நிறுவி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க உதவ வேண்டும்."

—என்று கோரி மலபார் மாவட்ட ஆட்சி மன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இப்போது பஸ் பிரயாணத்திற்கு அணா 5 குறைந்தபட்ச கட்டணமாயிருப்பதை அணா 2 ஆகக் குறைக்க வேண்டும் என்றும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மாவட்ட ஆட்சி மன்றத்தின் பொருளாதார நிலை, மிக அதிருப்திகரமாயிருப்பதாலும், சாலைகளின் பழுது பார்த்தலுக்கும் பாதுகாத்தலுக்குமாக பெருந்தொகை செலவிட வேண்டியிருப்பதாலும், வருமான வரி தருகிற மொத்த மர வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஒரு கன அடி மரத்திற்கு ஒரு தம்பிடி வீதம் 'செஸ் வரி' விதிக்க மாவட்ட ஆட்சி மன்றத்தை அனுமதிக்க வேண்டும் என்று சர்க்காரைக் கோரியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கு முன், பி. டி. வேலாயி என்ற காங்கிரஸ் உறுப்பினர், தான் தாக்கல் செய்துள்ள தீர்மானங்களை, மறுநாள் பிரேரபிக்க அனுமதிக்க வேண்டுமெனக் கோரினார்; ஆனால், தலைவரான பாஸ்கர பணிக்கர், அதற்கு இணங்க மறுத்துவிட்டார். இதன் விளைவாக, வேலாயி, மற்றும் ஒன்பது காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்டத்திலிருந்தும் வெளியேறியுள்ளனர்.

இதற்கு முன், மணி 6-15-ஆகிவிட்டதாகக்கூறி சபையை அடுத்த நாள் ஒத்திவைக்க வேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார்; தலைவர், இதர உறுப்பினர்களைக் கேட்டபோது, அவர்கள், விவாதிக்க வேண்டிய விஷயங்கள் நிரம்ப இருப்பதால் 7-30 மணி வரை கூட்டம் நடைபெற வேண்டுமெனத் தெரிவித்தனர்; எனவே, தலைவர், தொடர்ந்து கூட்டத்தை நடத்தி, தீர்மானங்களை நிறைவேற்றினர்.

இங்கல்ல!— அமெரிக்காவில்!

தொழிலாளியின் குறைந்த பட்ச ஊதியம் மணி ஒன்றுக்கு ரூ. 5!

அமெரிக்கா முழுமையிலுமுள்ள தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியம், மணி ஒன்றுக்கு ரூ 5 ஆகக் கொடுக்கப்படுமாம்!

இது வரையிலும், அமெரிக்கத் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் குறைந்த பட்ச ஊதியமாக மணி ஒன்றுக்கு ரூ. $3\frac{1}{2}$ தான் பெற்று வந்தார்களாம்

இந்தப் புதிய ஊதிய விகிதப்படி தொழிலாளர்கட்கு இனிமேல் வாரம் ஒன்றுக்கு ரூ 190 (சுமாராக) கிடைக்குமென்று கூறப்பட்டிருக்கிறது!

'அமெரிக்காவில் இப்போது பிரமாதமான அளவிற்கு சுபீட்சம் ஏற்பட்டிருக்கிறது' என்று அமெரிக்க சர்க்கார் கட்சியினர் அறிவித்திருக்கின்றனராம்.

சிந்தியா கம்பெனிக்கு ஜெர்மானிய கப்பல்!

பம்பாய், ஆக. 1—

மேற்கு ஜெர்மனியில் கட்டப்பட்ட பிரயாணிகள் — மற்றும் சாமான் போக்குவரத்துக்கான 'டீசல்' கப்பல் ஒன்று, சிந்தியா கம்பெனியாருக்காக இங்கிலாந்திலிருந்து பம்பாய் வந்து சேர்ந்துள்ளது.

9,500 டன் எடையுள்ள அந்த 'ஜல ஆசாத்' என்ற கப்பல், இந்திய இரயில்வேக்களுக்கான மூன்று ஜெர்மானிய எஞ்சின்கள், நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களுக்கான இயந்திர சாதனங்கள் உட்பட சுமார் 8,600 டன் சாமான்களை ஏற்றிக்கொண்டு வந்துள்ளது.

அந்தக் கப்பல், சாமான்களின் துரிதப் போக்குவரத்துக்காக இந்தியாவின் மேற்குக் கடற் கரைக்கும், பாகிஸ்தான், இங்கிலாந்து, மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு மிடையே உபயோகிக்கப்படும் என்று தெரிகிறது.

புதுடில்லி, ஆக. 1—

இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ 25 கோடி பெறுமான கதர் உற்பத்தி செய்ய அகில இந்திய கிராமக் கதர் கைத்தறிக் குழு திட்டமிட்டுள்ளதாம்.

நடப்பு ஆண்டில் ரூ 7 கோடி பெறுமான கதர் உற்பத்தி செய்யப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்!

அடுத்த பொதுத் தேர்தல் எப்போது?

இப்போது சொல்ல இயலாதாம்!

புதுடில்லி, ஆக. 1—

"அடுத்த பொதுத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பதை இப்போதே திட்டவட்டமாக அறிவித்துவிட முடியாது," என்று மக்கள் சபையில் சட்ட மந்திரி சி. சி. விஸ்வாஸ் கூறியிருக்கிறார்.

மாநில புனரமைப்புக்குழு தரும் அறிக்கையைப் பொறுத்தே அத்தேர்தல் நடைபெறும் காலத்தைக் கூற முடியுமென்றும், குழுவின் அறிக்கை பரிசீலனை செய்யப்படும் வரையில் அதுபற்றிய விவரமான பதில் எதுவும் தெரிவிக்க இயலாதென்றும் அவர் கூறியுள்ளார்.

ஆசிரியருக்குக் கடிதம்:

சங்கடம் வளர்ந்த பிறகா 'சமயம்' வரும்?

ஆசிரியர்: 'நம் நாடு'

ஐயா,

சமீபகாலமாக, நாள்தோறும் இந்தோ-சிலோன் 'துரிதவண்டி'களில், திருச்சி நிலையத்திலும், அதனை அடுத்த இரயில்வே நிலையங்களிலும் குடும்பம் குடும்பமாக இலங்கையிலிருந்து, இலங்கை சர்க்காரால் விரட்டப்பட்ட தமிழர்கள் வந்து இறங்கியவண்ணம் உள்ளனர்; இதுவரை வந்தவர்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களாகும்.

இவர்களில் பலரை நான், திருச்சி இரயில்வே நிலையத்தில் சந்தித்து அவர்களுடன் உரையாடினேன்.

அவர்கள், "எங்களுக்கு இலங்கையில் இடமில்லை; உங்கள் தாய் நாட்டிற்குப் போய்விடுங்கள்,' என்று விரட்டிவிட்டார்கள்; நாங்கள், தாய்நாடு—அதாவது, தமிழ் நாட்டில் திருச்சி போன்ற பெரிய மாவட்டங்களை அடுத்துள்ள சிற்றூர்களுக்குச் செல்கிறோம்," என்று கூறுகிறார்கள்.

"நீங்கள் சம்பாதித்த பணத்தை யாவது கொண்டு வந்தீர்களா?" என்று கேட்டதற்கு, 'அன்றாடம் வயிறு கழுவவே போதாத நிலையில் இருந்த எங்களுக்குக் கொண்டுவர பணம் ஏது?'—என்றார்கள்.

'இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?'—என்று கேட்டதற்கு, 'ஆண்டவன் விட்டவழி; என்ன செய்வதென்றே தெரியவில்லை; ஊர் போய்த்தான் யோசிக்க வேண்டும்'—என்று சொல்கிறார்கள்.

'சரி, ஊரில் வீடு வாசலாவது உள்ளதா?'—என்றால், நாங்கள் தான்—கடல் கடந்தாவது பிழைப்போம்—என்றுதானே சிங்களம் சென்றோம்? எங்களுக்கு வீடு வாசல் ஏது? என்று திருப்பிக் கேட்கிறார்கள்

அனைவரும் இதே பதிலைத்தான் கொடுத்தார்கள்; நல்ல தமிழே பேசத் தெரியவில்லை; நடை உடை பாவனைகளிலும் இலங்கைக் காரர்களைப் போன்றுதான் தோற்றமளிக்கிறார்கள்;

25, 30 வருடங்களாக அங்கு இருந்து, இப்போது விரட்டப்பட்ட இவர்களை மட்டும் அகதிப் பட்டியலில் இன்னும் சேர்க்கப்படக் காணோமே? ஏன்?

தமிழர் ஒருவரை இந்தியத் தூதுவராக நியமிக்கத் தவறிய இந்திய அரசாங்கத்தின் தவற்றை, இன்று இலங்கையிலிருந்து விரட்டப்பட்ட — நாடற்ற — நாதியற்ற தமிழர்கள் அனுபவிக்கிறார்கள்; வடநாட்டுத் தூதுவருக்கு, நம் தமிழரைப் பற்றி என்ன தெரியும்? எனவேதான், 'ஒப்பந்தம்—ஒப்பந்தம்' என்று காலத்தைக் கடத்தி இன்று கேட்பாரற்ற நிலையில் விரட்டியடிக்கப் பெறுகின்றனர், நம் தமிழர்!

இத்தனை ஆயிரம் குடும்பம் வந்தும், தமிழ் நாட்டில் ஒரு பரபரப்பையும் காணோமே!

எங்கோ, வடநாட்டில் இடமாற்றம் நடந்தபோது மட்டும், இந்திய உபகண்டம் முழுதும் அகதிப் பிரச்சினை எதிரொலித்தது. மத்திய அரசாங்கம் பல நூறு கோடி ரூபாய்களை வடநாட்டு அகதிகளுக்குக் கொட்டி அழுதிருக்கும்போது, இவர்களைப் பற்றி மட்டும் ஏனென்று கேட்க நாதியில்லையே?

டில்லி சட்டசபையில் ஒரு சமயம் இதுபற்றிக் கேட்டபோது, 'மாகாண அரசு பார்த்துக் கொள்ளும்,' என்று கூறினார் அகதி மந்திரி திரு. ஜெயின் என்பார்.

சென்னை அரசாங்கமோ, 'சமயம் வரும்போது கவனிக்கப்படும்,' என்று கூறியது.

இன்னுமா சமயம் வரவில்லை? குமரி முனையிலோ, இராமேசுவரம் துறைமுகத்திலோ ஒரு அதிகாரியைப் போட்டு, 'எத்தனை பேர், எப்படி வருகிறார்கள்,' என்று, அவர்களைப் பற்றி ஏதாவது விவ

(4-ம் கலம் பார்க்க.)

(5-ம் கலத்தின் தொடர்ச்சி.)

ரம் சேகரித்துள்ளனரா, இதுவரை நம் சென்னை அரசினர்?

இன்று, நாடற்ற — நாதியற்ற தமிழர்கள், எப்போதோ, தாம் வாழ்ந்ததாகக் கூறிக்கொள்ளும் சிற்றூர்களில், பெண்டு பிள்ளைகளுடன் பிச்சை எடுக்க ஆரம்பித்த பிறகுதான் அந்தச் 'சமயம்' வருமா?

ஆர். நாகசுந்தரம்,
திருச்சிராப்பள்ளி.

சென்ற பொதுத் தேர்தலின் புள்ளி விவரக் கண்ணோட்டம்

வாக்குப் பதிவு செய்தவர்கள், ஜாமீன் தொகை இழந்தவர்கள் எண்ணிக்கை

செலவான தொகை ரூ. 10 கோடிக்கும் அதிகம்

1951-ம் ஆண்டில் இந்தியாவில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில், 8½ கோடி வாக்காளர்கள், வாக்குப் பதிவு செய்துள்ளனர்

எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த 17,500 அபேட்சகர்கள் போட்டியிட்டனர்.

தேர்தல் நடைபெற்ற மொத்த இடங்கள் 3,862 ஆகும்.

வாக்குப்பதிவுகள் சுலபமாக நடைபெற 25,84,845 வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டன.

தேர்தலுக்கான மொத்தச் செலவு ரூ. 10 4 கோடி ; இதில், வாக்குப் பெட்டிகளுக்கு மட்டும் ரூ 1.22 கோடி செலவாயிற்று.

ஜாமீன் தொகை இழந்தவர்களில் பெரும்பான்மையோர் சுயேச்சையாளர்களாகும் ; 6,520 சுயேச்சையாளர்கள் போட்டியிட்டதில் 4,967 பேர் ஜாமீன் தொகையை இழந்தனர்.

மொத்தத்தில் ஜாமீன் தொகை இழந்த 9,198 அபேட்சகர்களில், சுயேச்சைகள் 54 சதவிகிதத்தினராவர்.

'ஜனசங்க்' அபேட்சகர்கள் எண்ணிக்கை 812; இதில், 536 பேர் ஜாமீன் தொகையை இழந்தனர்.

மக்கள் சோஷலிஸ்டு கட்சி (கிசான் மஸ்தூர் பிரஜா கட்சி உட்பட) 3,229 அபேட்சகர்கள் போட்டியிட்டனா; இதில் 1,877 பேர் ஜாமீன் தொகையை இழந்தனர்.

536 கம்யூனிஸ்டு அபேட்சகர்களில்212 பேர் ஜாமீன் தொகை இழந்தனர்.

காங்கிரஸ் கட்சி 6,747 அபேட்சகர்களை நிறுத்தியது; அதில், 1,010 பேர் ஜாமீன் தொகையை இழந்தனர்.

வாக்குப் பதிவுகளில் அதிக ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன; உதாரணமாக, திருவாங்கூர் — கொச்சி சட்டசபை தேர்தலில், பரணிகாவு தொகுதியில், 92 6 சதவிகித வாக்குகள் பதிவாயின ; ஆனுல் ஒரிசாவில் ஒரு தொகுதியில் 10.1 சதவிகிதம் வாக்குகள் பதிவாகியுள்ளது.

மாநில வாரியாகப் பார்த்தாலும் வாக்குப் பதிவானதில் பல வித்தியாசங்கள் காணப்படுகின்றன ; மாநில வாரியாக, 'சதவிகிதமாக' வாக்குப் பதிவு விவரம் கீழே தரப்படுகிறது :—

திருவாங்கூர்—கொச்சி	71
குடகு	67
டில்லி	57 9
சென்னை	56 4
பஞ்சாப்	55 3
ஆஜ்மீர்	54·3
பம்பாய்	52·4
மைசூர்	51 9
மணிப்பூர்	51 1
திரிபுரா	47 9
அசாம்	47 7
மத்தியப் பிரதேசம்	45
ஐதராபாத்	44 7
கட்ச்	41·4
பீகார்	40·5
மேற்கு வங்கம்	40·5
போபால்	40·3
உத்தரப் பிரதேசம்	38·4
சௌராஷ்டிரம்	
இராஜஸ்தான்	38 4
ஒரிசா	35 4
மத்திய பாரத்	35
விந்தியப் பிரதேசம்	30
இமாசலப் பிரதேசம்	25·3

இந்தியத் திட்டத்திற்கு அமெரிக்க உதவி

சில விவரங்கள்

சென்ற ஜூன் 30-ந் தேதியோடு முடிவடைந்த நிதி ஆண்டில், இந்தியாவுக்குக் கிடைத்த பொருளாதார உதவியும், தொழில் நுட்ப உதவியும் இந்தியாவின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு முக்கியமாகப் பயன்பட்டிருக்கின்றனவாம்.

அந்த நிதி ஆண்டில், அமெரிக்கா, இந்தியாவுக்கு ஒதுக்கிய தொகை 7¼ கோடி டாலராகும் ; இதில் 4½ கோடி டாலர் 40 ஆண்டு நீண்டகாலக் கடனாகவும், மற்றவை, வெறும் மானியமாகவும் கொடுக்கப்பட்டன.

அமெரிக்க உதவி எந்தத் திட்டத்துக்குக் கிடைத்தாலும் அந்தத் திட்டத்தில் பெருந்தொகை செலவு செய்வது இந்திய அரசாங்கமாகவே இருக்கும். பொதுவாக, இந்தியாவில் கிடைக்காத இயந்திர சாதனங்கள், மற்றும் அத்தியாவசியமான பொருள்கள், தொழில் நுட்ப உதவி இவற்றைக் கொடுத்துத் திட்டங்கள் முன்னேறத் துணை செய்வதே அமெரிக்கா செய்யும் உதவியாகும்.

மக்கள் உதவியாலும் மத்திய அரசாங்க நிதியினுலும் நடக்கும் சமுதாய நலத் திட்டங்களுக்கும் அமெரிக்காவின் உதவி பயன்பட்டுள்ளது.

மேலும், இந்தியாவின் ரயில்வே புனரமைப்பு, மலேரியா ஒழிப்பு ஆகிய திட்டங்களுக்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்கு வேண்டிய உருக்கிரும்பு, இரசாயன உரம், கோதுமை, பருத்தி இவற்றை வாங்குவதற்கும் பல்வேறு திட்டங்களுக்குத் தேவையான நிபுணர்களை அமர்த்திக் கொடுப்பதற்கும் அமெரிக்காவின் உதவி பயன்பட்டுள்ளது. இப்பல்வேறு திட்டங்களில், சமுதாய நலத்திட்டம், நிலத்திற்குக் கீழ் நீர் இருப்பதை ஆராயும் திட்டம், குடிநீர் வசதி செய்யும் திட்டம் முதலியவை அடங்கும்.

சமுதாய நலத் திட்டம் தொடங்கி இரண்டரை ஆண்டு காலத்தில், இந்திய அரசாங்கம் செலவழித்த தொகை சுமார் ரூ. 20 கோடியாகும் ; மக்களின் உதவியோ சுமார் ரூ 10 கோடியாகும்.

இத்தகைய சமுதாய நலத்திட்டம் சாதித்துள்ள பெருஞ் செயல்களுள் ஒன்று, புதிதாக வெட்டியும் பழையவற்றைப் புதுப்பித்தும் 32,000 கிணறுகளை உபயோகத்துக்குக் கொண்டுவந்து, 9,95,731 ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி செய்ததுமாகும்.

தீவிர சாகுபடி முறைகளையும், கன்றுகாலி, கோழி முதலியவற்றைக் கவனிக்கும் சேவைகளையும் புகுத்தியது மக்களுக்கு அதிக முக்கியமான பலன்களைத் தந்துள்ளது என்று இந்திய அரசாங்கம் கருதுகிறது.

சமுதாய நலத்திட்டத்தில் இவைமட்டுமின்றி, 6,658 புதுப் பாடசாலைகளும், 17,165 முதியோர் கல்விப் பள்ளிகளும் தொடங்கப்பட்டன.

இந்தியாவில் ஆட்டு தோல் விற்பனை

புதுடில்லி, ஜூலை 28—

இந்தியாவில், ஆண்டிற்கு மொத்தம் சுமார் 368 லட்சம் கச்சா ஆட்டுத் தோல்கள் உற்பத்தி செய்யப்படுவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அவற்றில் கொல்லப்பட்ட ஆட்டின் தோல்கள் 293 லட்சம் ; இயற்கையாக இறந்த ஆடுகளின் தோல்கள் 75 லட்சம். மொத்தத் தோல்களில் வெள்ளாட்டுத் தோல்கள் 213 லட்சம் ; மீதியுள்ளவை செம்மறியாட்டுத் தோல்கள்.

சென்னையில் சைக்கிள் உற்பத்தி

அதிகரிக்க ஏற்பாடு

சென்னை நகருக்கு அருகில் சுமார் 15 கல் தொலைவில் உள்ள அம்பத்தூர் எனுமிடத்தில் உள்ள சைக்கிள் தொழிற்சாலையின் வருடாந்திர உற்பத்தி சக்தி, 2,00,000-சைக்கிள்களாக விரைவில் அதிகரிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இத்தொழிற்சாலையில் தற்போது திங்களொன்றுக்கு 10,000 சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், இவ்வாண்டின் உற்பத்தியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சைக்கிள்களின் எண்ணிக்கை 1,20,000 என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிற்சாலை இந்தியர்—வெள்ளையர் கூட்டு நிர்வாகத்தில் இருந்து வருகிறது. இதனை நிறுவ சுமார் ரூ. 1½ கோடி செலவானது என்றும், சென்ற 1952-ம் ஆண்டு ஜனவரி திங்களில் தனது உற்பத்தியைத் தொடங்கியது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இத்தொழிற்சாலையின் மூலம் 750 பேர்கள் வேலையும் கிடைக்கப் பெற்றுள்ளனர்.

இத்தொழிற்சாலையை விரிவுபடுத்தும் திட்டம் தற்போது நிறைவேற்றப்பட்டுக்கொண்டு வருகிறதாம்.

மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்துவதில் மாநில சர்க்கார்கள் அனைத்தும் உதவி புரிபவைகளாக இருக்கும் பொருட்டு, மதுவகைகள் கலக்கப்பெற்ற மருந்து வகைகளைக் கட்டுப்படுத்துவதற்கென கொண்டுவரப்பட்ட மசோதா ஒன்று, டில்லி மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாம்.

'தினமணி' செய்திக்கு மறுப்பு

மதுரை கே. எஸ். சந்தானம் அறிவிப்பு

"27—7—55 'தினமணி' இதழிலும், 30—7—55 'தமிழ் நாடு' இதழிலும் 'நான் ஏன் தி. மு. கழகத்திலிருந்து விலகினேன்?' என்பது பற்றி மதுரை நகர காங்கிரஸ் ஊழியர் கழகக் கூட்டத்தில் நான் பேசியதாக வந்திருக்கும் செய்தி தவருனதாகும்; காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் நான் பேசவில்லை; எப்பொழுதும் போல், தி. மு. கழகக் கூட்டங்களில்தான் பேசிவருகிறேன் என்பதை பொது மக்களுக்கும், இச்செய்தியை வைத்துக்கொண்டு தப்புப் பிரச்சாரம் செய்யும் மாற்றுக் கட்சித் தோழர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்."

ஃ ஃ ஃ

மறுப்பு அறிக்கை

"'மதுரை காங்கிரஸ் ஊழியர் கழகக் கூட்டத்தில் மதுரை நகர் தி. மு. கழக செயற்குழுவிலிருந்து விலகிய கே. எஸ். சந்தானம் பேசியதாக' 27—7—55 'தினமணி'யில் வந்திருக்கும் செய்திக்கும், நமது கழகத் தோழர் கே. எஸ். சந்தானம் அவர்களுக்கும் சம்மந்தமில்லை என்பதோடு, காங்கிரஸ்காரர்களின் இம்மாதிரி பித்தலாட்டச் செய்திகளின் மூலம் தங்கள் கட்சியை வளர்த்துவிடலாமென்று நினைக்கும் தவருன போக்கைக் கண்டிப்பதோடு, அப்படி ஒருவரும் மதுரை நகர் தி. மு. கழகச் செயற்குழுவில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்," என்று, மதுரை நகர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் பி. கே. சேதுராமன் அறிவிக்கிறுர்.

கி. பி. 2,000-த்தில் சந்திரனைப் பார்த்துவர பிரயாணம்

அமெரிக்க எஞ்சினீயர் நம்பிக்கை

மனிதர்கள், வானத்தில், ராக்கெட்டுகள் மூலம் வட்டமிட முடியும்—கி. பி. 2,000-த்திற்கு முன் சந்திர மண்டலத்திற்கு மக்கள் சென்று வரும் பிரயாணங்கள் நிகழ முடியும் என்று, தான் நம்புவதாக அகில உலக வான சாத்திரக் கழகத் தலைவரான பிரெடரிக் ட்யூரண்ட் என்பார் கூறியிருக்கிறுர்.

"வானத்தை நோக்கி அனுப்பப்பட்ட 'ராக்கெட்' ஒன்றை எப்படி மீண்டும் பூமிக்குக் கொண்டுவருவது என்பதுதான் பெரும் பிரச்சினை ; 'பத்திரமாக பூமிக்குத் திரும்ப முடியும்' என்ற நிலை ஏற்படுமுன், ஒரு மனிதரை ராக்கெட் மூலம், மேலே அனுப்பமாட்டோம்," என்றும் அவர் தெரிவித்திருக்கிறுர்.

★

பூமியைச் சுற்றிவர செயற்கை கிரகங்கள்!

மணிக்கு 18,000 மைல் வேகம் செல்லக்கூடும் ?

மணி ஒன்றுக்கு 18 ஆயிரம் மைல் வேகத்தில், 90 நிமிடங்களுக்கு ஒரு தடவை பூமியைச் சுற்றிவர, பெரிய கால்பந்து உருவத்தில், சிறு செயற்கை உப 'கிரகங்களை' உருவாக்க விஞ்ஞானிகள் திட்டமிட்டிருக்கிறுர்கள். இத்திட்டத்திற்கு சுமார் 1 கோடி டாலர் செலவாகலாம் என மதிப்பிடப்படுகிறது.

முதலாவது உப-கிரகங்களை இரண்டாண்டுகளுக்குள் பூமிக்கு மேல் அனுப்ப முடியுமென விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

பூலோகத்திற்கு அப்பாற்பட்ட பகுதிகளின் நிகழ்ச்சிகளைக் கண்டறியவே இவ்வித செயற்கை பறக்கும் கால்பந்துகள் (உபகிரகங்கள்) உற்பத்தி செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

பூமிக்கு மேல் 200 அல்லது 300 மைல் உயரத்தில் இக்கிரகங்கள் சுற்றிக்கொண்டிருக்கும்.

நாட்கணக்காக அல்லது வாரக்கணக்காக அவைகள் அந்தரத்திலேயே தங்கலாம் ; பின்னர் கீழே வந்து, பிரிந்துவிடும்.

ரஷ்யா உட்பட எல்லா தேசங்களின் விஞ்ஞானிகளுக்கும் இத்திட்டத்தின் தகவல் தெரிவிக்கப்படும்.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது நேச நாடுகளின் தலைநகர்களின் மீது நாஜிகள் பிரயோகித்த 'வி-2' ராக்கெட்டுகள் போன்று இப்பறக்கும் கால்பந்துகளும் இருக்கும்.

ரஷ்யாவும் இத்தகைய உருண்டைகளை உயரே அனுப்புவதற்கு போட்டி போட்டுக் கொண்டிருக்கிறதாம்!

★

பிரிட்டன் கருத்து

லண்டன், ஜூலை 31—

'பறக்கும் பந்து'களை வான மண்டலத்துக்கு அனுப்பும் அமெரிக்கத் திட்டம் பற்றிப் பிரிட்டனில் பெரிதும் பேசப்படுகிறது. இந்த ஆராய்ச்சியில் பிரிட்டிஷ் விஞ்ஞானிகளுக்கும் அனுபவம் உண்டு.

பறக்கும் தட்டுகள் உண்மையானவைதான் என்று இப்போது கருதப்படுகிறது. 'இனி 'இரும்புத் திரைகள்' இருக்கமுடியாது என்றும், உலகைச் சுற்றிவரும் பந்துகள் மூலம் எல்லா நாடுகளிலும் நடப்பதை அறியலாம் என்றும் சொல்லப்படுகிறது.

காலநிலை மாறுதல்களைப் பல வாரங்களுக்கு முன்பே துல்லியமாக அறிவிப்பது—நாம் விரும்பும் இடத்தில் வெய்யில் அடிக்கவோ, மழை பெய்யவோ செய்வது—அட்லாண்டிக் சமுத்திரத்தை 7 நிமிடத்தில் கடக்கும் விமானங்களை அமைப்பது முதலியவை சாத்தியமாகலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

★

ஆஸ்திரேலியா முயலுகிறது

ஆஸ்திரேலியாவும் வான மண்டலத்துக்கு ராக்கெட்டுகளை அனுப்பி ஆராய்ச்சி நடத்தவிருக்கிறது. அமெரிக்காவை விடக் குறைந்த செலவில் ராக்கெட்டுகளை அனுப்ப ஆஸ்திரேலியா வழி கண்டுபிடித்திருக்கிறது.

★

இயற்கையையே மாற்றக் கூடுமாம்!

ஜெர்மன் விஞ்ஞானிகள் கருத்து

வான்பிரான், ஓபெர்த் என்ற ஜெர்மன் விஞ்ஞானிகள் கூறுவதாவது :—

"வான மண்டலத்தில் பருவ நிலையை மாற்றும் நிலையங்களை அமைக்கலாம் ; பிரும்மாண்ட கண்ணுடிகளைப் பொருத்தி சூரிய கிரணங்களைக் குறிப்பிட்ட பிரதேசங்கள் மீது ஒரேயடியாகத் திருப்பிவிடலாம் ; பெரிய ஏரிகளையும், கடல்களையும் கொதிக்கவைத்து நீராவியாக மாற்றலாம் ; வாயு அழுத்தத்தை நம் விருப்பம்போல் மாற்றலாம் ; மின்சார விளக்கு போடுவது போல நாம் விரும்பும்போதெல்லாம் சூரியவெளிச்சத்தைத் தருவிக்கலாம் ; நினைத்த இடத்தில் மழை பெய்விக்கச் செய்யலாம்."

உங்கள் குறிப்புக்கு!

கிழக்கு இரயில்வேயின் மார்க்கம் 2,321 மைல் நீளமுள்ளது ; அதன் தண்டவாளப் பாதை 5,259 மைல் நீளமுள்ளது. 80,000 மைல் பிரதேசத்துக்குப் பயன்படும் இந்த இரயில்வே—மேற்கு வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசத்தில் மக்கள் நெருக்கம் மிகுந்து காணப்படும் பகுதிகள் ஆகியவற்றில் வியாபித்துள்ளது.

பழைய கிழக்கிந்திய இரயில்வேயின் பிரிவுகளாக மொகல் சராய்க்குக் கிழக்கே இருக்கும் திலுப்பூர், தன்பாத், அஸன்ஸால், ஹௌரா, சீல்தா ஆகியவை மூலம் கிழக்கு ரயில்வே அமைக்கப்பட்டிருக்கிறது.

மொகல்சராய் வரை, கிராண்டு கார்டு லைன் வழியாகச் செல்லும் நேர்பாதையில் மின்சார இரயில் வசதி ஏற்பாடு செய்வது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதற்கு, ரூ. 77,19,00,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கிழக்கு இந்திய இரயில்வே மார்க்கத்தில், கல்கத்தாவும், மிகப் பெரிய இரயில் எஞ்சின் உற்பத்தி சாலையாக விளங்கும் சித்தரஞ்சனும், மிகப் பெரிய இரசாயன உர உற்பத்திச்சாலையான சிந்திரியும் இருக்கின்றன.

தென்கிழக்கு இரயில்வே :

தென்கிழக்கு இரயில்வேயின் மார்க்கம் மொத்தம் 3,999 மைல் நீளமும், அதன் தண்டவாளப் பாதை மொத்தம் 5,909 மைல் நீளமும் இருக்கிறது.

இந்த இரயில்வே, மேற்கு வங்காளம், ஒரிசா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் தலைநகர்களை இணைக்கிறது.

கல்கத்தா துறைமுகத்தையும், விசாகப்பட்டணம் துறைமுகத்தையும் இந்த இரயில்வே இணைக்கிறது. இந்த இரயில்வே மார்க்கத்திலும் பரவியுள்ள பிரதேசங்கள்—இரும்புக் கனி, செம்பு, நிலக்கரி, மாங்கனீசியம், சுண்ணும்பு, பாக்ஸைட், டோலமைட் போன்ற முக்கிய மூலப் பொருள்களின் கனிப் படிவங்கள் மிகுந்ததாக விளங்குகிறது.

பெங்களூர் மாவட்ட தி. மு. கழகம்

பெங்களூர், ஜூலை 17—

பெங்களூர் மாவட்ட தி மு. கழகக் கிளைச் செயற் குழு, இன்று காலை 11 மணியளவில் பிளாக் பள்ளி அப்பாவு பிள்ளை பள்ளிக் கூடத்தில், தேர்தல் ஆணையாளர் தி. மு கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் மாவட்டச் செயற் குழு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்:—

செயலாளர்: எஸ். வி. பதி —பெங்களூர் (எக்ஸ்)

துணைச் செயலாளர்: எம். மன்னர் — இலக்குமணபுரி (பெங்களூர்-2)

பொருளாளர்: கே. விசயரங்கம் —சீராமபுரம் (பெங்களூர்-3)

பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் பின்வருமாறு:—

1. ஏ. டி. பிரான்சிஸ் —பெங்களூர்-1.
2. எஸ். ஜே. ஹுசேன் —பெங்களூர்-6

நந்திதுர்கம் தி. மு. கழகம்

31—7—55 காலை 11 மணிக்கு, கோலார் தங்கவயல் நந்திதுர்கம் தி. மு கழகக் கிளையின் உறுப்பினர் கூட்டம் தோழர் எஸ். வி பதி தலைமையில் நடைபெற்றது. அது போது மேற்படி கிளைக் கழகப் புதிய நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது. ஏற்கனவே நிர்வாகக் குழுவில் அங்கம் வகித்த உறுப்பினர்களனைவரும் புதிய குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இராபர்ட்சன் பேட்டையில் தி. மு. க. (கிளை) துவக்கம்

31—7—55 பிற்பகல் 2 மணியளவில், கோலார் தங்கவயல் இராபர்ட்சன் பேட்டையில், தர்பார் சிற்றுண்டிச் சாலையில். தோழர் எஸ். வி. பதி தலைமையில் சுமார் 40 உறுப்பினர்களைக் கொண்ட கிளைக் கழகத் துவக்க விழா நடைபெற்றது. விரைவில் கிளைக் கழக நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்படும் என்றும், தற்காலிகக் கிளைச் செயலாளராகத் தோழர் எஸ். டி. சந்திரநாதன் பணியாற்றுவார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பர்மா தி. மு. கழகம்

பர்மா தி. மு. கழக தேர்தல் கூட்டம் 19—6—55-ல், கழகப் பணிமனையில் (197, பிரேசர் வீதி, ரங்கூன்) தோழர் வெ. உ. கலைமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கடந்த 3—1—54 முதல் 18—6—55 வரை கழக நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையைப் பொறுப்பாளர் வாசித்தார்.

அறிக்கையை உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டனர்.

பின்னர், உறுப்பினர்கள் கூடி தோழர்கள் மாரியப்பன், கே. எஸ். ஆறுமுகம், இராம. முத்தழகு, கா. சு. ஆறுமுகம், வி. சுப்பிரமணி, பி. நெடுஞ்சேரன், அ. சோலையப்பன், பெ. இளமாறன், ச. இளங்கோவன், வி. எஸ். டேவிட், எஸ். இராமசாமி, சா. கணேசன், செ. சுப்பிரமணி, வி சுப்பையா ஆகியோரை பொதுக் குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்தனர்.

மலகான் கிளைக் கழகப் பிரதிநிதிகளான தோழர்கள் வி. கருப்பையா, வெ. உ. கலைமுத்து, ப. சு. கணபதி முதலியோர்களும் பொதுக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பின்னர், பொதுக் குழு உறுப்பினர்கள் கூடி, தோழர் வி. சுப்பிரமணி அவர்களை பர்மா தி. மு கழகப் பொதுச் செயலாளராகவும், இராம. முத்தழகு அவர்களைப் பொருளாளராகவும், வி கருப்பையா அவர்களைக் கணக்குத் தணிக்கையாளராகவும் தேர்ந்தெடுத்தனர்.

புதிய செயலாளர் நன்றி நவில, கூட்டம் இனிது முடிவுற்றது.

இந்தி நுழைவதற்கு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

போதனா மொழியாக இந்தியைப் புகுத்துவது அழிவையே தேடித்தரும்; கல்லூரிகளில் போதனா மொழியாவதற்கு இந்திக்கு என்ன அருகதை இருக்கிறது? வட இந்தியாவில் பெரும்பான்மை மக்கள் இந்தி பேசுபவர்களாக இருப்பதால் அங்கு இந்தி போதனா மொழியாக ஆக்கப்படுவது நியாயமே;

"ஆனால், தென்னாட்டில் பெரும்பான்மையினர் தமிழ் மொழி பேசுபவர்களேயாதலால், தமிழ் தான் போதனா மொழியாக்கப்பட வேண்டும்; ஆனால், அதே நேரத்தில், இந்தி தேசிய மொழியாவதை தென்னாட்டவர்கள் தடுக்கக் கூடாது.

"தென்னாட்டில் உள்ள வேறு பல பல்கலைக் கழகங்களைப் போலவே, இந்த அண்ணாமலை பல்கலைக் கழகமும், போதனா மொழியாகத் தமிழ் மொழியையே ஏற்றுக்கொள்ளும்;

"ஆங்கிலம்தான் நமக்கு, வளர்ந்து கொண்டே இருக்கும் மனித அறிவை எல்லாம் கொண்டு வந்து தருகிறது; அப்படிப்பட்ட ஆங்கிலத்தைப் புறக்கணிப்பது, நமக்குக் கிடைக்கும் அறிவை, நாம் தடுத்துக்கொள்வதாகும்;

"ஆங்கிலம் இப்போது ஆங்கிலேயர்களுடைய மொழியாகமட்டுமில்லை; ஒரு சர்வதேச மொழியாக, ஆங்கிலத்தைத் தவிர வேறெதுவுமிருக்க முடியாது.

"எனவே இங்கு, அந்த ஆங்கில மொழி அறிவுபெறும் தரம் காக்கப்பட வேண்டும் என்பது மட்டுமின்றி, மேலும் உயர்த்தப்பட வேண்டும்;

"பல்கலைக் கழகத்தின் இரண்டு நோக்கங்கள்—ஒன்று, தமிழ் மொழியை போதனா மொழியாக்குவது; மற்றொன்று, ஆங்கில மொழி அறிவு பெறும் தரத்தை உயர்த்துவது—என்பதாகும்."

சென்னை நகரில் விறகு விலை ஏற்றம்

மந்திரி தரும் உறுதிமொழி!

சென்னை, ஆக 3—

சென்னை நகரில் தற்போது எல்லா பண்டங்களின் விலையும் குறைந்துள்ளதெனினும், விறகுகளின் விலை மட்டும் குறையாமல் இருப்பது மட்டுமல்லாமல் முன்பு இருந்த விலையைக் காட்டிலும் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. இதன் விளைவாகச் சென்னை நகர மக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகின்றனர்.

இத்தகவலைக் குறிப்பிட்டு சென்னை சட்டசபையில் கூறப்பட்டபோது, அமைச்சர் பக்தவத்சலம், அதுபற்றித் தாம் கவனிப்பதாக உறுதி கூறியிருக்கிறாராம்.

மத்திய ஆட்சியினர் ஆலோசிக்கிறார்களாம்!

சென்னையில் சேரி ஒழிப்புக்கு மாநில சர்க்கார் சமர்ப்பித்த திட்ட நிலைமை

புதுடில்லி, அக். 2—

சென்னை நகரில் சேரி அபிவிருத்திக்கென சென்னை மாநில சர்க்கார் ஒரு திட்டம் சமர்ப்பித்துள்ளனர் என்றும், சேரி ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக மாநில சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் 'நியாயமா'கத் தரவேண்டிய நிதி உதவியின் தன்மை, அளவு ஆகியவை பற்றி மத்திய சர்க்கார் இன்னும் ஆலோசனை செய்து வருவதாகவும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கழகக் கூட்டங்கள்

★

புழல்

கடைத் தெருவில்
(தி. மு. கழகம் எதிரில்)
4—8—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். கணபதி
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
கண்ணதாசன்

★

இடைப்பாடி

5—8—55 மாலை 6½ மணிக்கு
தலைவர்: பா. பண்டரிநாதன்
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
சிற்றுளி ஏ. சுப்பிரமணியம்

★

நாகர்கோவில்

நகரசபைத் திடலில்
5—8—55 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
கி. மனோகரன்

மாநில மாநாட்டு நிதி

தென் ஆற்காடு மாவட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு

"தென் ஆற்காடு மாவட்ட தி. மு. கிளைக் கழகங்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட மாநில மாநாட்டு பங்கீட்டுத் தொகையை, பல கிளைகள் இதுவரை செலுத்தாமலே இருந்துவருவது வருந்தத்தக்கதாகும். அதுபோன்றே, தனிப்பட்ட கழக ஆதரவாளர்களும், தோழர்களும் தாங்கள் வாக்களித்துள்ள தொகையைக் கொடுக்காது, காலம் தாழ்த்திவருகின்றனர். இதன் விளைவாக நமது மாவட்டத்தில் அண்ணா சுற்றுப்பயணத்திற்கும், மாநில மாநாட்டு நிதி அளிப்புக்கும் திட்டவட்டமான நாளைக் குறிப்பிட முடியாமல் இருக்கிறது. எனவே, மேலும் நாள் கடத்தாமல், தங்கள் தங்கள் பங்குத் தொகையை உடனடியாக மாவட்டச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டுகிறேன்,"

என்று, தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அறிவிக்கிறார்.

முகவரி:—இரா. சாம்பசிவம், தென் ஆற்காடு மாவட்ட தி. மு கழகச் செயலாளர், 7, குருவப்ப நாயுடு தெரு, புதுப்பாளையம், கடலூர், (என். டி.)

சொற் பயிற்சிக் கூட்டம்

5—8—55 மாலை 6 மணிக்கு; வண்ணை கே. எஸ் பாண்டியன் படிப்பக பணிமனையில், தோழர் மோகன் தலைமையில், 'நமது குறிக்கோள்' என்ற பொருள் பற்றி படிப்பக உறுப்பினர்கள் பேசுவர்.

கோவா பிரச்சினை: அமெரிக்காவின் கவலை

வாஷிங்டன், ஆக 2—

"கோவா பிரச்சினை சம்மந்தமாக இந்தியா—போர்ச்சுகல் ஆகியவற்றுக்கிடையே இருந்து வருகின்ற தகராறுகள் சமாதானமான வழியிலும், ஐ. நா. சாசனத்திற்கு உகந்த ஒரு முறையிலும் பைசல் செய்யப்பட்டுவிடும் என அமெரிக்க சர்க்கார் நம்புகிறது,"

என்று, அமெரிக்க இராஜாங்க அமைச்சர் டல்லஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

"மற்ற இடங்களில் ஏதாயினும் அபாயகரமான நிலைகள் ஏற்பட்டால் அமெரிக்கா எந்த அளவிற்குக் கவலை எடுத்துக் கொள்ளுமோ அந்த அளவிற்குக் கோவா பிரச்சினையிலும் கவலை எடுத்துக் கொள்கிறது,"

என்று, அவர் மேலும் கூறியுள்ளார்.

தடையுத்தரவை மீறி விவசாயிகள் ஊர்வலம்

நிலங்களில் நுழைந்து மாடுகளை அவிழ்த்து விரட்டினராம்!

திருச்சி, ஆக. 2—

திருச்சிக்கு அருகில் உள்ள முசிறி எனும் இடத்தில், சுமார் 300 விவசாயிகள், தடை உத்திரவையும் மீறி ஊர்வலமாகச்சென்று சுந்தரம்பாளையம் எனும் கிராமத்திற்கு அருகில் உள்ள நிலங்களில் நுழைந்து, ஏரில் பூட்டப்பட்டு நிலத்தை உழுதுகொண்டிருந்த மாடுகளைக் கட்டவிழ்த்துவிட்டு ஓட்டிவிட்டனர் எனச் செய்தியொன்று கூறுகிறது.

முசிறி போலீசார், தடையுத்தரவை மீறியதாக 6 விவசாயிகள் மீதும், அத்துமீறி நிலத்தினுள் நுழைந்ததாக மற்றும் 3 பேர் மீதும் இரண்டு வழக்குகளைப் பதிவு செய்துள்ளனராம்.

இதுமட்டுமல்லாமல் ஆயலூரில், கடந்த 21-ந் தேதியன்று சுமார் 100 பேர் அத்துமீறி நிலங்களில் நுழைந்ததாகவும், சுமார் 61 பேர் மீது கி. பு சோ 143, 447 ஆகிய பிரிவுகளின் கீழ், காட்டுப்புதூர் போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர் என்றும் மற்றொரு செய்தி அறிவிக்கிறது.

திருச்சி மாவட்ட தி.மு.கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

"7—8—55 பிற்பகல் 3 மணிக்கு, துறையூர் தி. மு. கழக அலுவலகத்தில், திருச்சி மாவட்ட செயற்குழுக் கூட்டம், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் முன்னிலையில் நடைபெறும். பொருள்: மாநில மாநாட்டு நிதி வசூல்; வரவு-செலவு; புதிய கழகங்கள் பதிவு; வட்டக்குழு அமைப்பு; பொதுக்குழு உறுப்பினர் தேர்தல்,"

என்று, திருச்சி மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் ஏ பி தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

தாரை வட்ட கிளைக் கழக செயலாளர்கட்கு

"பொதுச்செயலாளரின் கோவை வரவேற்பின்போது, மாநில மாநாட்டுக்குக் கொடுத்த நிதி போக பாக்கியை—மாவட்டச்செயலாளர் குறிப்பிட்ட தொகையின்படி கொடுத்ததுபோக பாக்கியைநேரடியாக மாவட்டச்செயலாளருக்கோ, அல்லது தாரை வட்டக்குழுவின் மூலமாகவோ உடனடியாக அனுப்பி வைக்கக் கோருகிறேன்,"

என்று, தாரை வட்ட தி. மு கழக வட்டக் குழு பொருளாளர் தோழர் கே. எஸ். சிரங்கராயர் அறிவிக்கிறார்.

தஞ்சை மாவட்ட தி.மு.க. வட்டச் செயலாளர்கட்கு

தஞ்சை மாவட்ட தி.மு.கழக வட்டச் செயலாளர்களின் ஆலோசனை கூட்டம், 7-8-55 காலை 9 மணிக்கு, மாயூரம் டிராவலர்ஸ் பங்களாவில் நடைபெறும்."

* * *

மாயூரம் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு

"மாயூரம் தி. மு. கழகத்தில் ஏற்பட்டிருக்கிற சில நிலைமைகளைப் பரிசீலிக்கவும், முடிவு எடுக்கவும், 7—8—55 காலை 10 மணிக்கு, மாயூரம் டிராவலர்ஸ் பங்களாவில், மாயூரம் தி. மு. கழகக் கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்."

* * *

காரைக்கால் வட்ட தி.மு.க. கிளைச் செயலாளர்கட்கு

"காரைக்கால் வட்டக் குழுக் கூட்டம், 7—8—55 மாலை 5 மணிக்கு, காரைக்கால் கழகப் பணிமனையில் நடைபெறும்,"

—என, தஞ்சை மாவட்ட தி மு. கழகச் செயலாளர் தோழர் என் எஸ் இளங்கோ அறிவிக்கிறார்.

மலாயா முதல் மந்திரி சபை

தொழிலாளர் இலாகா அமைச்சராக இந்தியர் இடம் பெறுகிறார்!

அண்மையில் மலாயாவில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் பெரும்பான்மையாக வெற்றிபெற்றுள்ள 'முக்கூட்டணி'யிடம், மலாயா மந்திரி சபையை அமைக்கும்படி பிரிட்டிஷ் பிரதம அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

அம்மந்திரி சபையில், மலாயா இந்தியர் காங்கிரசின் தலைவரும், தோட்ட முதலாளியுமான வி. டி. சம்பந்தம் என்பார், தொழிலாளர் இலாகா அமைச்சராக இடம் பெற்றுள்ளாராம்—மற்றும், 6 மலாயர்களும், 3 சீனர்களும் அம்மந்திரி சபையில் இடம் பெறுவர்.

பிரதமராக இருக்கும் டெங்கு அப்துல் ரஹ்மானே உள்நாட்டு இலாகாவையும் மேற்கொள்வார் என்றும், பெரும்பாலும், இந்த மந்திரி சபை பின்னர் விரிவுபடுத்தப்படலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மக்கள் சபை நடைபெறும்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மந்திரி படாஸ்கர், "சபையில் உறுப்பினர்கள் அமர்ந்திருப்பதின் மூலம், 'கோரம்' நிலவ உதவுமாறு உறுப்பினர்களை—அவர்கள் சர்க்கார் கட்சியினரோ, எதிர்க்கட்சியினரோ—எந்தக் கட்சியிலிருப்பவர்களாயினும்—நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"ஒரு சர்க்கார் மசோதா விவாதத்திலிருக்கும்போது, சர்க்கார் கட்சியினர்தான் 'கோரம்' கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்; என்றாலும், பொறுப்பு, சர்க்கார் கட்சியினரை மட்டுமின்றி எல்லாக் கட்சியினரையும் சார்ந்ததே," என்று, தலைவர் யூ என். பர்மன் குறிப்பிட்டிருக்கிறார்.

அறிவிப்பு

அச்சுப் பொறியில் ஏற்பட்ட கோளாறுகளின் காரணமாக 1—8—55-ல் வரவேண்டிய 'தமிழ் நாடு டைம்ஸ்' இதழ் வெளிவர இயலாமற் போய் விட்டது. 15—8—55 இதழ் அதிக பக்கங்களுடன் வெளி வரும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி, 'தமிழ் நாடு டைம்ஸ்'
187, மௌண்ட் ரோடு,
சென்னை—2

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.